Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 233/2023** |
| Deposition of witness for | :: | **PW. 2** |
| Name | :: | **துரைபாண்டியன்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**
**01.06.2026**
**முதல் விசாரணை**:

1. நான் தற்போது சேதுராஜபுரத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆவணத்திலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். கடந்த 23.07.2023ம் தேதி நண்பகல் 12.15 மணியளவில் சேதுராஜபுரத்தில் உள்ள அரசு ஆரம்ப பள்ளி அருகே நின்று கொண்டிருந்தபோது டிராக்டர் தொலைந்து போன வழக்கு சம்மந்தமாக போலீசார் வந்து விசாரணை செய்து சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். அப்போது சாட்சியாக நான் மேற்படி கையெழுத்தை செய்து கொடுத்தேன். என்னுடன் சேர்ந்து ரமேஷ் என்ற நபரும் சாட்சி கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். **(பார்வை மகஜர் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அசா.1 பற்குணன் எனக்கு நல்ல பழக்கமான எனது ஊர்க்காரர் என்றால் சரிதான். அசா.1 எனக்கு தெரிந்தவர் என்ற காரணத்தினால்

காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்த பார்வை மகஜர் ஆவணத்தில் நான் கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**